



RNI (PRGI) No.TNTAM/25/A0208

# உள்ளாட்சி அரசு

தினசரி தமிழ் காலை நாளிதழ்

“இயற்றலும் ஈட்டலுங் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு” திருவள்ளுவர்

youtube.com/@ullatchiarasu facebook.com/ullatchi.arasu.5

*** COIMBATORE ஞாயிறு பிப்ரவரி 01 * 2026 * மலர் -1 * இதழ்-243* VOL-1 * ISSUE-243 விலை ரூ.3 * பக்கம் -4**












திருப்பத்தூர் அடுத்த மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இருந்து புதிய பேருந்து நிலையம் வரை போதைப்பொருள் விழிப்புணர்வு பலகைகள் ஏந்தி துண்டு பிரசுரம் பொதுமக்களுக்கு கொடுத்து பேருந்து நிலையம் மற்றும் பேருந்துகள் மற்றும் ஆட்டோக்கள் விழிப்புணர்வு பிரசுரம் கொடுத்து போக்குவரத்து துறை மற்றும் போதை பொருள் விழிப்புணர்வு நிகழ்ச்சியை திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் சிவசந்திரன் வள்ளி கொடி அசைத்து தொடங்கி வைத்தார் பின்னர் நிகழ்ச்சியானது கலை நிகழ்ச்சிகள் திருப்பத்தூர் புதிய பேருந்து சிறப்பாக நடைபெற்றது இதில் இது பொதுமக்கள் கல்லூரி மாணவர்கள் பள்ளி மாணவ மாணவிகள் ஆகியோர் ஊர்வலமாக சென்று போதை பொருள் விழிப்புணர்வு சிறப்பாக நடைபெற்றது

### “இது நம்ம ஆட்டம்–2026”

# சேலம் மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகள்!

### அமைச்சர் ராஜேந்திரன் தொடங்கி வைத்தார்!!

சேலம், பிப்.1–

சேலம் மாநகராட்சி, மகாத்மா காந்தி விளையாட்டரங்கத்தில் இன்று முதலமைச்சர் இளைஞர் விளையாட்டுத் திருவிழா "இதுநம்மஆட்டம்2026" மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகளை சுற்றுலாத்துறை அமைச்சர் ராஜேந்திரன் , மாவட்ட ஆட்சித்தலைவர் பிருந்தாதேவி முன்னிலையில் தொடங்கி வைத்தார்.



பின்னர் சுற்றுலாத்துறை அமைச்சர் பேசும் போது,

சேலம் மாவட்டத்தில் முதலமைச்சர் இளைஞர் விளையாட்டுத் திருவிழா "இதுநம்மஆட்டம்2026" விளையாட்டுப் போட்டிகள் கடந்த 25–ந் தேதி தொடங்கி வைக்கப்பட்டு வட்டார அளவிலான போட்டிகள் சேலம் மாவட்டத்தில் உள்ள அனைத்து வட்டாரங்களிலும் நடைபெற்றது.

அதன் தொடர்ச்சியாக, வட்டார அளவில் நடைபெற்ற போட்டிகளில் முதலிடம் பெற்ற நபர்கள் மற்றும் அணிகளுக்கு மாவட்ட அளவிலான போட்டிகள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இந்த போட்டிகளில் 20 வட்டாரங்களைச் சேர்ந்த 960 வீரர்கள் மற்றும் 960 வீராங்கனைகள் பங்கேற்கின்றனர்.

அதன்படி, இன்றைய தினம் மாவட்ட அளவிலான தடகளம் 100மீட்டர், குண்டெறிதல், கேரம் (இரட்டையர்), கபடி, த்ரோ பால் (பெண்கள்), கயிறு இழுத்தல் ஆண்/பெண் இருபாலருக்கும் ஆகிய போட்டிகளும், நாளை 31–ந் தேதி, Street கிரிக்கெட் (ஆண்கள்) வாலிபால், (ஆண்கள், பெண்கள்) இருபாலருக்கும், ஓவியபோட்டிகள், கோலப்போட்டிகள், மாறுத்திறனாளிகளுக்கான 100மீட்டர், குண்டெறிதல் ஆகிய போட்டிகள் நடக்கிறது.

இப்போட்டிகளில் முதல் மூன்று இடங்களை பெறுபவர்களுக்கு தலா ரூ.6,000/, ரூ.4,000/, ரூ.2,000/ பரிசுத்தொகையாக வழங்கப்படவுள்ளது.

மேலும், மாவட்ட அளவிலான கபடி (பெண்கள்) மற்றும் ஸ்ட்ரீட் கிரிக்கெட் (ஆண்கள்) ஆகிய போட்டிகளில் முதலிடம் பெறும் அணியினர் மாநில அளவிலான போட்டிகளில் கலந்துகொள்வர்.

இப்போட்டிகளில் முதல் மூன்று இடங்களை பெறுபவர்களுக்கு தலா ஒவ்வொருவருக்கும் ரூ.75000/, ரூ.50000/, ரூ.25000/ பரிசுத்தொகையாக வழங்கப்படவுள்ளது என்றார்.

நிகழ்ச்சியில், சேலம் மாநகராட்சி மேயர் ராமச்சந்திரன், மேட்டூர் சட்டமன்ற உறுப்பினர் சதாசிவம், துணை மேயர் சாரதாதேவி, மாவட்ட விளையாட்டு அலுவலர் சிவரஞ்சன் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தேசிய தொழுநோய் விழிப்புணர்வு பேரணி, சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்றது. இந்தப் பேரணியை மாவட்ட ஆட்சியர் டாக்டர் இரா. பிருந்தாதேவி கொடியசைத்து துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியை தொடங்குவதற்கு முன்பு, ஆட்சியர் தலைமையில் 300க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் மற்றும் அரசு அலுவலர்கள், தேசிய தொழுநோய் விழிப்புணர்வு உறுதி மொழியை எடுத்துக் கொண்டனர். பின்னர் தொடங்கிய இந்த பேரணி, மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இருந்து தொடங்கி, சேலம் மாநகராட்சி அலுவலகம் வரை சென்று, மீண்டும் ஆட்சியர் அலுவலகத்தை வந்தடைந்தது. இந்த நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் டாக்டர்.பிருந்தாதேவி, மாவட்ட வருவாய் அலுவலர் ரவிக்குமார், உள்ளிட்ட ஏராளமான அரசு அலுவலர்கள் மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர்கள் என 300க்கும் மேற்பட்டோர் இந்த பேரணியில் கலந்து கொண்டனர்.



கிருஷ்ணகிரியில் மாற்றுக் கட்சியினர் 100 பேர் கிழக்கு மாவட்ட செயலாளர்மதியழகன் எம்.எல்.ஏ. முன்னிலையில் தி.மு.க.வில் இணைந்தனர்.

### புதுக்கோட்டை அருகே

# பள்ளிவாசல் திறப்பு விழாவிற்கு சீர்வரிசை எடுத்து வந்த மாற்று சமூகத்தினருக்கு இஸ்லாமியர்கள் வரவேற்பு!





புதுக்கோட்டை ,பிப்.1

புதுக்கோட்டைஅருகேவெட்டிவயல் பள்ளி வாசல் திறப்பு விழாவிற்கு சீர் சுமந்து வந்து இந்து முஸ்லிம் ஒற்றுமையை வெளிப்படுத்திய இந்துக்கள் பள்ளி வாசல் வாயிலில் நின்று இஸ்லாமியர்கள் உற்சாக வரவேற்பு கொடுத்தனர்.

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி அருகே உள்ள வெட்டிவயல் மற்றும் கருங்குழிகாடு கிராமத்தில் புதி தாக கட்டப்பட்டு திறக்கப்பட உள்ள ஜூம் ஆ பள்ளிவாச ல் சிறப்பு விழாவில் பள்ளி வாசலுக்கு அருகே உள்ள விஸ் வநாதபுரம்.வெட்டிவயல் சீனமங்களம் திட்டக்குடி மேல்ம ங்கலம்..கருங்குழிக்காடு ஆகிய கிராமங்களைச் சேர்ந்த இந்துக்கள் பள்ளிவாசலுக்கு எடுத்துச் செல்லும்சீர்தட்டுகளைவிநாயகர்கோவிலில் வைத்து வழிபாடு செய் தனர்.

பின்னர் மேளதளங்கள் முழங்க ஊர்வலமாக எடுத்துச் சென்று திறப்பு விழா காணும் பள்ளிவாசலுக்கு எடுத்து ச் சென்றனர் விழாவில் இஸ்லாமியர்கள் வாயிலில் நி ன்று சந்தனம் குங்குமம் பன்னீர் தெளித்து மகிழ்வுடன் வரவேற்றனர்.

நிகழ்வு இந்து முஸ்லிம் ஒற்றுமையை வெளிப்படுத்தும் சமூக நல்லிணக்க விழாவாக அனைவரும் மெச்சும்வகையில் நடைபெற்ற இச்சம்பவம் அப்பகுதியில் நெகி ழ்ச்சியை அடையச்செய்தது விழாவுக்கு கிராமமக்கள் மேளதாளங்கள்முழங்கசீர்எடுத்துவந்துமகிழ்ச்சி கடலில் பள்ளி வாசல் பொது ம க்கள் மற்றும் நிர்வாகிககள் நெகழ்ச்சியை ஏற்படுத்திய தாக தெரிவித்தனர்.

# தமிழ்நாடு & புதுச்சேரி: எச்டிஎஃப்சி எர்கோ நடத்திய 3வது மாநில இன்சூரன்ஸ் ஜூனியர் கிராண்ட் ஃபினாலே !

சென்னை,பிப்.1

ந்தியாவின்முன்னணிதனியார்பொதுக் காப்பீட்டு நிறுவனம் HDFC ERGO 2026 ஆம் ஆண்டிற்கான மாநில இன்சூரன்ஸ் வினாடி வினா ஜூனியர் – தமிழ்நாடு &



புதுச்சேரி பிரிவு இறுதிப் போட்டியை வெற்றிகரமாக நடத்தியது. கல்குளம் GHSS மாணவர்கள் ஸ்ரீனுபிரசாத் மற்றும் அஜேஷ் சாம்பியன்கள் ஆனனர்; சிபிதர்ஷன், நிகில் முதல் இரண்டாம் இடம், மோனிஷா, அனுஷ்யா இரண்டாம் இரண்டாம் இடம் பெற்றனர். வெற்றியாளர் அணிக்கு ₹1.5 லட்சம், முதலிடம் ₹90,000, இரண்டாம் இடம் ₹60,000, மற்ற ஐந்து அணிகளுக்கு ₹30,000 ரொக்கப் பரிசு வழங்கப்பட்டது.

இந்த ஆண்டின் போட்டிக்கு 42 மாவட்டங்களில் இருந்து 1,070க்கும் மேற்பட்ட குழுக்கள் பங்கேற்றன; இது கடந்த ஆண்டு 530 குழுக்களை விட இரண்டு மடங்கு அதிகம். HDFC ERGO நிர்வாக இயக்குனர் பார்த்தனில் கோஷ் நிகழ்ச்சியின் வெற்றியை பாராட்டி, இளம் வயதில் நிதி விழிப்புணர்வை உருவாக்குவது எதிர்காலத்திற்கான அடித்தளமாகும் என்றும், மாணவர்களுக்கிடையில் காப்பீடு குறித்த ஆர்வத்தை அதிகரிப்பதாகவும் குறிப்பிட்டார்.

2016 முதல் HDFC ERGO தேசிய அளவில் ‘Insurance Quiz Junior’ நடத்தி வருகிறது, இதில் 25 லட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கேற்றுள்ளனர். 2025 ஆம் ஆண்டில் முதன்முறையாக Insurance Quiz Senior அறிமுகப்படுத்தப்பட்டு 1,100 மாணவர்கள் கலந்து கொண்டனர். நிறுவனத்தின் மற்ற முயற்சிகளில் ‘காப்பீட்டு வாரம்’ மூலம் 29 பொதுக் காப்பீட்டு நிறுவனங்கள், மக்கள் விழிப்புணர்வு பிரச்சாரங்கள் மற்றும் 17 இலட்சம் தொடர்புகளைஉருவாக்கியமைகுறிப்பிடத்தக்கது.

# “உள்ளூர் முதல் சர்வதேசம்: ACMA Automechanika New Delhi - இந்தியாவின் பிந்தைய சந்தை & வாகன உதிரி பாகங்கள் கண்காட்சி”

சென்னை,பிப்.1

கொள்கை சீர்திருத்தங்கள், உள்ளூர்மயமாக்கல் முயற்சிகள் மற்றும் விரைவான தொழில்நுட்ப முன்னேற்றங்களால் இந்தியாவின் வாகன உதிரி பாகங்கள் மற்றும் பிந்தைய சந்தை வலுவான வளர்ச்சியின்



புதிய கட்டத்தை அடைகிறது. ACMA கணிப்பின்படி, 2025 நிதி ஆண்டில் வாகன உதிரி பாகங்கள் தொழில் 80.2 பில்லியன் அமெரிக்க டாலர் அளவிற்கு இருக்கும் என்றும், பிந்தைய சந்தை தற்போது 11.8 பில்லியன் அமெரிக்க டாலராக உள்ளது என்றும் கூறப்படுகிறது. 2030 வரை இந்தத் துறை 111–200 பில்லியன் அமெரிக்க டாலர் வரையிலான வளர்ச்சியை எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

*ACMA Automechanika New Delhi 2026:*

பிப்ரவரி 5–7, தில்லி ICC யஷோபூமியில் நடைபெறும் ஆறாவது பதிப்பு, வாகன உதிரி பாகங்கள் மற்றும் பிந்தைய தொழில்துறையின் இந்தியாவின் முன்னணி சர்வதேச வர்த்தக கண்காட்சியாகும். இதில் 870க்கும் மேற்பட்ட கண்காட்சியாளர்கள், ஓஇஎம்கள், விநியோகஸ்தர்கள், கேரேஜ்கள், ஃப்ளீட் ஆபரேட்டர்கள் மற்றும் சர்வதேச வாங்குபவர்கள் கலந்து கொள்ளுவர். நிகழ்ச்சி மூன்று நாட்கள் தொழில்நுட்ப அமர்வுகள், தலைமைத்துவ விவாதங்கள் மற்றும் நேரடி டெமோக்களுடன் நடைபெறும்.

பங்கேற்பாளர்கள் & முன்னணி நிறுவனங்கள்:

சர்வதேச பங்கேற்பாளர்கள் 20 நாடுகளைச் சேர்ந்தவர்கள்; சீனா, ஜெர்மனி, ஹாங்காங், ஜப்பான், கொரியா, இலங்கை, தைவான், தாய்லாந்து ஆகிய நாடுகளுக்கு சிறப்பு அரங்குகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்திய நிறுவனங்களில் அட்வான்டெக் வீல்ஸ், அக்குரப் கார்ப்டெக், ஆம்பிள் ஆட்டோடெக், ஆட்டெல் இந்தியா, பாங்கோதயாரிப்புகள், எலோஃபிக் இண்டஸ்ட்ரீஸ், ஜி. ஒய் பேட்டரிகள், கேட்ஸ் கார்ப்பரேஷன், ஜே. கே. ஃபென்னர், லுத்ரா, மான் + ஹம்மல், மிண்டா கார்ப்பரேஷன், என். ஆர். பி. பியரிங்ஸ், ஷாஃப்லர், எஸ். கே. எஃப், சிக்மா, சுமாக்ஸ், டாடா ஆட்டோ காம்ப், டால்ப்ரோஸ், வின்னி கெமிக்கல்ஸ், இசட். எஃப் ஆகியவை பங்கேற்கின்றன, உலகளாவிய தொழில்நுட்பங்கள் மற்றும் சந்தைக்குப் பிந்தைய தீர்வுகளை காட்சிப்படுத்துகின்றன.




# “ரீசார்ஜ்” - ஒரு புதிய கட்டாயம்

சென்னை,பிப்.1

இன்று நம் வாழ்க்கையில் “ரீசார்ஜ்” என்பது ஒரு சொல்லாக இல்லாமல், ஒரு தினசரி தேவையாக மாறியுள்ளது. தொலைபேசியில் ரீசார்ஜ் முடிவடையும் முன்பே இரண்டு நாட்களுக்கு முன்னதாகவே, “ரீசார்ஜ் முடிவடையப் போகிறது” என்று மெசேஜ்களும் அழைப்புகளும் வந்து விழித்தெழுப்புகின்றன. அந்த நாளிலிருந்து நம் மனதில் ஒரு பதட்டம் தொடங்குகிறது “இன்னும் இரண்டு நாளில் ரீசார்ஜ் செய்யணும்” என்ற எண்ணம். முன்னொரு காலத்தில் 10 ரூபாய், 20 ரூபாய் போன்ற சிறிய ரீசார்ஜ் கார்டுகள் கிடைத்தன. விவசாயிகள், கூலி தொழிலாளர்கள், கிராமப்புற மக்கள் யாருக்காவது தேவையான அளவுக்கு மட்டுமே ரீசார்ஜ் செய்து கொண்டு இருந்தனர். யாராவது அழைக்கலாம் என்ற நம்பிக்கையில், 10 ரூபாய் போதும் என்ற நிலைமை. பேசத் தெரியாவிட்டாலும், அவர்களுக்கு பேசுவதற்கான வழி இருந்தது. ஆனால் இன்று அந்த 10 ரூபாய் கார்டும் இல்லை, 20 ரூபாய் கார்டும் இல்லை. எங்கே சென்றன அவை? நாம் இன்டர்நெட் பயன்படுத்தினாலும் சரி, பயன்படுத்தாவிட்டாலும் சரி அதற்கும் கட்டாயமாக பணம் செலுத்த வேண்டும்!


இது எந்த விதத்தில் நியாயமாகும்?

கிராமத்தில் வாழும் விவசாயிகள், கூலி தொழிலாளர்கள் இவர்களுக்கு இன்டர்நெட் தேவையே இல்லாதவர்கள். ஆனாலும் அவர்கள் மாதந்தோறும் 200 ரூபாய், 300 ரூபாய் செலுத்தி “டேட்டாவுடன்” சேர்த்த ரீசார்ஜ் செய்ய வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். முன்பு ரீசார்ஜ் செய்யவில்லை என்றாலும், சில மாதங்களுக்கு அழைப்புகள் வந்துக்கொண்டே இருக்கும். ஆனால் இப்போது? ரீசார்ஜ் முடிந்த மூன்று நாளில் அழைப்புகள் நிறுத்தபடுகிறது. “நீ ரீசார்ஜ் செய்யாமல் பேச முடியாது” ஏன் இந்த தடை? இது ஒரு பொறுப்பு மிக்க அரசாங்கம் கவனிக்க வேண்டிய பிரச்சினை அல்லவா? மட்டும் அல்லாது.... “இன்டர்நெட்டின் பெயரிலும் விலைவாசி”

இன்றைய இளைஞர்கள் பெரும்பாலும் சமூகவலைதளங்களில் முழுமையாக ஈடுபட்டுள்ளனர். ஆனால் அதே இன்டர்நெட்டில் “1 ஜிபி முடிந்தது” என்று வரும் ஒரு சிறிய செய்தி கூட சில நேரங்களில் நம்மை பதட்டப்படுத்துகிறது. 49 ரூபாய், 39 ரூபாய் என்ற குறுகிய கால ரீசார்ஜ்களும் உள்ளன. ஆனால் அவை குறிப்பிட்ட நேரம் மட்டுமே செயல்படும்!

# “கும்பகோணில் ஸோஹோ ஈஆர்பி அறிமுகம் - இந்தியாவில் உருவான ERP, உலக சந்தையில் போட்டி”

கும்பகோணம்,பிப்.01



ஸோகோ இணை நிறுவனர் மற்றும் தலைமைவிஞ்ஞானி ஸ்ரீதர் வேம்பு இந்தியாவில் உருவாக்கப்பட்ட ஸோகோ ஈஆர்பி (Zoho ERP) சாஃப்ட்வேர் இந்திய வணிகங்களின் வளர்ச்சிக்கு உதவும் என்று தெரிவித்துள்ளார். சென்னை தலைமையிடமாக செயல்படும் Zoho நிறுவனம், தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணத்தில் உள்ள பிராந்திய அலுவலகத்தில் இந்த தீர்வை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த ERP, AI, லோகோட் மற்றும் நோகோட் வசதிகளுடன், எளிமையான செயல்பாடு மற்றும் குறைந்த செலவு மூலம் நிறுவனங்களுக்கு ஆதரவு வழங்குகிறது.

Zoho ERP நிதி மேலாண்மை, ஊதியம், பில்லிங், செலவு, விநியோகச் சங்கிலி மேலாண்மை மற்றும் ஓம்னிசேனல் வர்த்தகம் போன்ற செயல்களை ஒரே தளத்தில் ஒருங்கிணைக்கிறது. இது ஜிஎஸ்டி, இஇன்வாய்ஸிங், IFRS 15, ASC 606 போன்ற விதிமுறைகளுடன் உடன்பட்டு ஊதியம் மற்றும் வரி கணக்கீட்டில் தானியங்கி உதவி வழங்குகிறது. உற்பத்தி, விநியோகம், சில்லறை வணிகம் மற்றும் இலாப நோக்கற்ற நிறுவனங்கள் தங்கள் செயல்பாடுகளை நிர்வகித்து வருமானத்தை தெளிவாக கண்காணிக்க முடியும்.

### அந்தியூரில்

# மர்ம விலங்குகள் கடித்து 4 ஆடுகள் உயிரிழப்பு!

ஈரோடு, பிப்1

அந்தியூர் வனத்தை ஒட்டியுள்ள இருவேறு பகுதிகளில் மர்ம விலங்குகள் கடித்து 4 ஆடுகள்உயிரிழந்த நிலையில், தானியங்கி கேமரா பொருத்தி வனத்துறையினர் கண்காணித்து வருகின்றனர்.

அத்தாணி காலனி, வெங்கிடு தோட்டத்தைச் சேர்ந்தவர் வெங்கடாசலம் (50). விவசாயி. அந்தியூர் வனத்தை ஒட்டியுள்ள இவரது தோட்டத்து வீட்டில் வளர்த்து வந்த 2 ஆடுகள், 4 கோழிகளை மர்ம விலங்குகள் கடித்து உயிரிழந்தது வியாழக்கிழமை தெரியவந்தது. இதுகுறித்த தகவலறிந்து அத்தாணி பிரிவு வனத்துறையினர் சென்று, மர்ம விலங்கு வந்து சென்ற பாதையில் காலடித் தடங்களை ஆய்வு செய்தனர். மேலும், வனவிலங்கின்நடமாட்டத்தை கண்டறிய இருவேறு இடங்களில் தானியங்கி கேமராக்களையும் பொருத்தி கண்காணித்து வருகின்றனர்.

இதேபோல் அம்மாபேட்டையை அடுத்த ஊமாரெட்டியூர், சுந்தராம்பாளையம், பந்தல்கரட்டைச் சேர்ந்தவர் சின்னு (75). கூலித் தொழிலாளி.

இவர், தனது 7 ஆடுகளை பாலமலை அடிவாரத்தில் உள்ள பட்டியில் அடைத்து வைத்திருந்த நிலையில், புதன்கிழமை இரவு பட்டிக்குள் புகுந்த மர்ம விலங்கு 2 ஆடுகளைக்கடித்து கொன்றதோடு, ஓர் ஆட்டை வனத்துக்குள் இழுத்துச் சென்றது தெரியவந்தது.

சம்பவ இடத்துக்கு சென்னம்பட்டி வனத்துறையினர் சென்று மர்ம விலங்கின் காலடித் தடங்களை ஆய்வு செய்தனர்.

Owned, Printed and Published by N. JAYAPRAKASH printed at Ali Mohamed Sayeed Offset Printers NO.29, V.N. DASS ROAD, BORDER THOTTAM, MOUNT ROAD Chennai 600002.
Published from Old No. 73/C 13 Nagaratchi cleaners colony, Housing unit, south ukkadam Coimbatore641 001. Editor: N.JAYAPRAKASH

# நெல்லை மாவட்டத்தில் நடைபெற்று வரும் தாமிரபரணி கூட்டுகுடிநீர் திட்டப்பணிகள் - சபாநாயகர் அப்பாவு, ஆட்சியர் சுகுமார் ஆய்வு!






நெல்லை,பிப்.1

நெல்லை மாவட்டத்தில் ரூ.605 கோடி மதிப்பில் பாளையங்கோட்டை, சேரன்மகாதேவி, களக்காடு, நாங்குநேரி. வள்ளியூர், இராதாபுரம் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள 831 ஊரக குடியிருப்புகளுக்கு நடைபெற்றுவரும்தாமிரபரணி கூட்டுக்குடிநீர் திட்டப்பணிகள் குறித்தும். ரூ.423.13 கோடி மதிப்பில் களக்காடு நகராட்சி, வடக்கு வள்ளியூர், பணகுடி, திசையன்விளை, ஏர்வாடி, திருக்குறுங்குடி, நாங்குநேரி, மூலைக்கரைப்பட்டி, ஆகிய 7 பேரூராட்சிகளில் நடைபெற்று வரும் கூட்டு குடிநீர் திட்டப்பணிகள்குறித்தும் ஆய்வு மேற்கொண்டதில் களக்காடு நகராட்சி மற்றும் 7 பேரூராட்சி பகுதிகளுக்கு சேரன்மகாதேவி பகுதியில் தாமிரபரணி ஆற்றிலிருந்து நீர் எடுக்கப்பட்டு கங்கனான்குளம் பகுதியில் உள்ள திருவிருத்தான்புள்ளியில் நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டு நீர் விநியோகம் செய்யப்படவுள்ளது. இத்திட்டத்திற்கு 24 மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் அமைக்கப்பட்டு வருகிறது. பணிகள் முடிக்கும் தருவாயில் உள்ளது.மேலும், தாமிரபரணி ஆற்றில் இருந்து 831 ஊரக குடியிருப்புகளுக்கு ரூ.605 கோடி மதிப்பில் நடைபெற்று வரும் கூட்டு குடிநீர் திட்டப்பணிகள் மேலமுன்னீர்பள்ளம் பகுதியில் தண்ணீர் எடுக்கப்பட்டு, சிங்கிகுளம் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள சுத்திகரிப்பு நிலையத்திற்கு கொண்டு செல்லும் பணிகள் முடிவடைந்துள்ளது. மேலும், பிரண்டமலை பகுதிக்கும் தண்ணீர் கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து நீர்நிலை தொட்டிகளுக்கு தண்ணீர் கொண்டு செல்லும் சோதனை பணிகள் நடைபெற்று வருகிறது.இப்பணிகள் அனைத்தும் விரைவில் முடிக்கப்பட்டு, பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர துறை சார்ந்த அலுவலர்களிடம் ஆலோசிக்கப்பட்டது. மேலும், குடிநீர் பணிகளுக்காக தோண்டப்பட்ட சாலைகள் பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் சரிசெய்து கொடுப்பதற்கான பணிகளை விரைந்து முடிக்க அறிவுறுத்தப்பட்டது. இந்த ஆய்வின் போது, கண்காணிப்பு பொறியாளர் கருப்பையா, நிர்வாக பொறியாளர்கள் ராமலெட்சுமி, பாக்கியராஜ், நெடுஞ்சாலைத்துறை கோட்டப்பொறியாளர் ராஜசேகர், உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்). கிறிஸ்டோபர் தாஸ், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், வடக்குவள்ளியூர், திசையன்விளை, திருக்குறுங்குடி, பணகுடி, மூலைக்கரைப்பட்டி, நாங்குநேரி. ஏர்வாடி ஆகிய பேரூராட்சி செயல் அலுவலர்கள், களக்காடு நகராட்சி ஆணையாளர் உட்பட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



# 2026 சட்டமன்றத் தேர்தலைப் புறக்கணிக்க குடுமியாம்பட்டி கிராம பொதுமக்கள் முடிவு!

தர்மபுரி,பிப்.12

தர்மபுரி மாவட்டம் அரூர் வட்டம், குடுமியாம்பட்டி கிராமத்தில் நீதிமன்ற உத்தரவு இருந்தும் தார்ச்சாலை அமைக்க விடாமல் தடுத்து வரும் தனிநபர்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி, வரும் 2026 ம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலைப் புறக்கணிக்கப் போவதாகக் கிராம மக்கள் அறிவித்துள்ளனர்.

குடுமியாம்பட்டி முதல் செல்வசமுத்திரம் வரையிலான சாலை இப்பகுதி மக்களின் முக்கியப் போக்குவரத்துப் பாதையாக இருந்து வந்தது.

ஆனால், 1999ம் ஆண்டு ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சிலர் இச்சாலையை மறித்து பாதை செல்ல விடாமல் தடுத்து, நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தனர்.

சுமார் நான்கு ஆண்டுகள் நடைபெற்ற இந்த வழக்கில், கடந்த 2003ம் ஆண்டு "தார்ச்சாலை அமைக்க எவ்வித ஆட்சேபனையும் இல்லை" என நீதிமன்றம் தீர்ப்பளித்தது. தீர்ப்புநகலுடன்சாலைஅமைக்க அதிகாரிகள் முயற்சிக்கும் போதெல்லாம், சம்பந்தப்பட்ட நபர்கள் தார்ச்சாலை அமைக்க விடாமல் தடுத்து நீதிமன்ற உத்தரவை தொடர்ந்து அவமதித்து வருகின்றனர்.

"அதிகாரிகளின் மெத்தனப் போக்கு:

இது தொடர்பாக 2022ம் ஆண்டு தமிழக முதல்வர், மாவட்ட ஆட்சியர் மற்றும் கோட்டாட்சியர் ஆகியோரிடம் மனு அளித்தும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனப் பொதுமக்கள் வேதனை தெரிவிக்கின்றனர்.

விவசாயப் பயன்பாட்டிற்கும், பொதுமக்களின் அவசரத் தேவைக்கும் பயன்படும் இந்தப் பாதையை மீட்டுத் தரக் கோரி, வரும் 2026 சட்டமன்றத் தேர்தலைத் தர்மபுரி மாவட்டம், அரூர் வட்டத்தைச் சேர்ந்த குடுமியாம்பட்டி கிராம மக்கள் முழுமையாகப் புறக்கணிக்க தீர்மானித்துள்ளனர்.



# பெல்லுஅள்ளி அரசு மேல்நிலைப்பள்ளியில் உயர் கல்வி வழிகாட்டி நிகழ்ச்சி!

பாலக்கோடு,பிப்.1

தர்மபுரி மாவட்டம், பாலக்கோடு அடுத்த பெல்லுஅள்ளி அரசு மேல்நிலைப்பள்ளியில் உயர் கல்வியே எங்கள் இலக்கு என்ற உயர்கல்வி வழிகாட்டி நிகழ்ச்சி பள்ளியின் தலைமை ஆசிரியர் முனைவர் வாசுதேவன் தலைமையில் நடைபெற்றது. பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர், பள்ளி மேலாண்மை குழு தலைவர் சத்யா முன்னிலை வகித்தார். உதவி தலைமை ஆசிரியர் சரவணன் வரவேற்று பேசினார். இதில் பதினோராம் வகுப்பை சேர்ந்த 45 மாணவர்களுக்கும் அவர்களின் பெற்றோர்களும் கலந்து கொண்டனர். உயர் கல்வி வழிகாட்டி ஆசிரியர் அறிவுடைநம்பி, பன்னிரண்டாம் வகுப்பு முடித்தவுடன் மாணவர்களுக்கு என்னென்ன படிப்புகள் உள்ளன, அவற்றில் சேர்வதற்கான நுழைவுத் தேர்வுகள், விண்ணப்பிக்கும் வழிமுறைகள் குறித்தும், மாணவிகளுக்கு புதுமைப்பெண் திட்டம், மாணவர்களுக்கு தமிழ் புதல்வன் திட்டங்கள் குறித்தும்,

7.5 சதவீ இட ஒதுக்கீடு, முதல் தலைமுறை பட்டதாரி மாணவர்கள் மற்றும் போட்டி தேர்வுகள் ஆகியவை குறித்து விரிவாக எடுத்து கூறினார்.

சிறப்பு விருந்தினராக முன்னாள் தலைமை ஆசிரியர் சிவமூர்த்தி கலந்து கொண்டு மாணவர்களுக்கு ஆலோசனை வழங்கினார். தொடர்ந்து மாணவர்களுக்கு உயர்கல்வி குறித்து வினாடி வினா போட்டிகள்நடத்தப்பட்டுவெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. இந்நிகழ்சியில் பள்ளி மேலான்மை குழு நிர்வாகிகள் முனிலட்சுமி ரகுராமன், முன்னாள் மாணவர்கள் ஜான்பென்னிகுவிக், நந்தினி, மற்றும் ஆசிரியர்கள்கலந்து கொண்டனர்.

விழா நிறைவாக முதுகலை ஆசிரியை விமலா நன்றியுரை ஆற்றினார்.

# ரியல்மி P4 பவர் 5G: இந்தியாவின் முதல் 10,001mAh பேட்டரி கொண்ட ஸ்மார்ட்போன்!

கோயம்புத்தூர்,பிப்.1




ரியல்மி இந்தியா தனது P சீரிஸ் வரிசையில் பெரிய புரட்சியை ஏற்படுத்தி, 10,001mAh டைட்டன் பேட்டரி கொண்ட ரியல்மி P4 பவர் 5G ஸ்மார்ட்போனைக் கிழக்கு சந்தையில் அறிமுகம் செய்துள்ளது. இது நீடித்த பேட்டரி ஆயுள், 80W ஃபாஸ்ட் சார்ஜிங், 27W ரிவர்ஸ் சார்ஜிங், 7400 அல்ட்ரா 5G சிப்செட் மற்றும் 144Hz ஹைப்பர்க்ளோ 4D கர்வ் அமோலெட் டிஸ்ப்ளே போன்ற முன்னோடி தொழில்நுட்பங்களுடன் இளைஞர்களுக்கான பிளாகுஷிப் அனுபவத்தை வழங்குகிறது.

ஸ்டைலான வடிவமைப்பு மற்றும் பாதுகாப்பு அம்சங்கள் P4 பவர் 5G, ஜென் Zரசனைக்கு ஏற்ற டிரான்ஸ்பரண்ட் எஸ்தெடிக்ஸ், IP68/IP69/IP66 பாதுகாப்பு, கார்னிங் கொரில்லா கிளாஸ், 400% அல்ட்ராபூம் ஹைவால்யூம் ஆடியோ மற்றும் ரியல்மி UI 7.0 ஆகியவை ஒருங்கிணைந்துள்ளன. இது பேர்ல் அகாடமியுடன் இணைந்து வடிவமைக்கப்பட்ட இளமையுள்ள, ஸ்டைலான தோற்றத்தையும், நிரம்பிய தொழில்நுட்பத்தையும் இணைக்கிறது.

## 60 ஆண்டு கால நிலவியல் பாதை ஆக்கிரமிப்பு:

# நீதிமன்ற உத்தரவை அமல்படுத்த கோரி ஆர்.டி.ஓவிடம் பொதுமக்கள் மனு!



தர்மபுரி,பிப்.1

தர்மபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி வட்டம், நம்பிப்பட்டி அருகே உள்ள விஜியநகரம் கிராமத்தில் 60 ஆண்டுகளுக்கும் மேலாகப் பயன்பாட்டிலுள்ள

பொது நிலவியல் பாதையை ஆக்கிரமித்துள்ள நபர்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரியும், இது தொடர்பான நீதிமன்ற உத்தரவை அமல்படுத்த வலியுறுத்தியும் அரூர் வருவாய் கோட்டாட்சியரிடம் கிராம மக்கள் மனு அளித்தனர்.

விஜியநகரம் கிராமத்தில் சுமார் 30க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றனர். இவர்கள்தங்கள்விவசாய நிலங்களுக்குச் செல்லவும், விளைபொருட்களை ஏற்றிச் செல்லவும் காலங்காலமாக கீழ்க்கண்ட புல எண்களைக் கொண்ட நிலவியல் பாதையை பயன்படுத்தி வருகின்றனர்:

புல எண்கள்: 150/4A, 126/2A, 126/1B4, 126/1B1, 151/1C1, 151/1A, 150/1A2, 150/3A1, 150/3B1, 152/6A1, 152/6C1. தற்போது விஜியநகரம் கிராமத்தைச் சேர்ந்த செல்வராஜி, கோமதி, கலையரசி மற்றும் நல்லம்மாள் ஆகியோர் இந்தப் பொதுப் பாதையை ஆக்கிரமித்து பாதையில் செல்ல விடாமல் ஆக்கிரமித்துள்ளனர்

பாதை மறிக்கப்பட்டுள்ளதால்,கடந்த ஒரு வாரமாக பள்ளி செல்லும் குழந்தைகள்பள்ளிக்கு செல்லாமல் வீட்டிலேயே இருக்கின்றனர் பள்ளிக்கு செல்ல வேண்டும் என்றால் நீண்ட தூரம் சுற்றிச் செல்ல வேண்டிய அவல நிலை ஏற்பட்டுள்ளது.

டிராக்டர் உள்ளிட்ட வாகனங்கள் செல்ல முடியாததால் விவசாயப் பணிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

கடந்த மூன்று மாதங்களுக்கு முன்பு அரசு நிலஅளவையர் (Surveyor) மூலம் நிலம் அளவீடு செய்யப்பட்டு, ஆக்கிரமிப்பு இருப்பது உறுதி செய்யப்பட்டது.

இருப்பினும், வருவாய்த்துறையினர் ஆக்கிரமிப்புகளை அகற்ற இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என பொதுமக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

# போச்சம்பள்ளி அருகே மது விற்றவர் கைது!



கிருஷ்ணகிரி,பிப்.1

கிருஷ்ணகிரி மாவட்டம் நாகரசம்பட்டி காவல் நிலைய பகுதியில் போலீசார் ரோந்து பணியில் இருந்த போது மதுபானம் விற்பனை செய்வதாக கிடைத்த தகவலின் பேரில் அகரம் கிராமத்தில் ஆவத்துவாடி கிராமத்தைச் சேர்ந்த சதீஷ் என்பவர் உணவு கடையில் சோதனை செய்த போது சட்டவிரோதமாக மதுபானங்கள் பதுக்கி வைக்கப்பட்டிருந்தது. மதுபானம் விற்பனை செய்து கொண்டிருந்த நபரை கைது செய்து அவரிடமிருந்து மது பானங்கள் பறிமுதல் செய்து காவல் நிலையம் கொண்டு வந்து வழக்கு பதிந்து எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தி சிறையில் அடைத்தனர்.



# வெவ்வேறு சமுதாயத்தில் திருமணம் செய்த பெண்ணிற்குச் சித்ரவதை:

## குழந்தையை மீட்க விசிக மாவட்ட செயலாளர்கள் களமிறங்கி எஸ்பியிடம் புகார்!!

விருதுநகர்,பிப்.1

வெவ்வேறு சமுதாயத்தில் திருமணம் செய்த காரணத்திற்காகக் கணவர் வீட்டாரால் சித்ரவதை செய்யப்பட்டு குழந்தையைப் பறிகொடுத்த பெண்ணிற்கு ஆதரவாக விடுதலைச் சிறுத்தைகள் கட்சி நிர்வாகிகள் களமிறங்கிப் புகார் அளித்துள்ளனர்.

விருதுநகர் மாவட்டம் சாத்தூரைச் சேர்ந்த அந்தோணிராஜ் மகள் வெண்ணிலா(22) என்பவருக்கும் ஈரோடு சிங்காநல்லூரைச் சேர்ந்த நந்தகுமார்(31) என்பவருக்கும் கடந்த 2021ல் இருவீட்டார் சம்மதத்துடன் திருமணம் நடைபெற்றது.

இவர்களுக்கு ஹாஸ்னி என்ற பெண் குழந்தை உள்ளது. மாற்றுச் சமூகத்தைச் சேர்ந்தவர் என்ற காரணத்தினால் கடந்த ஓராண்டாக வெண்ணிலாவை அவரது கணவர் மற்றும் குடும்பத்தினர் சாதிய ரீதியாக இழிவுபடுத்தி தாக்கியுள்ளனர்.


கணவர் வீட்டாரின் கொடுமை தாளாமல் தப்பிச் சென்ற வெண்ணிலா இதுகுறித்து திங்களூர் காவல் நிலையம் சென்ற போது அங்கிருந்த கணவர் தரப்பைச் சேர்ந்த 50க்கும் மேற்பட்டோர் அவரைச் சூழ்ந்துகொண்டு குழந்தையைத்தர மறுத்துக் கொலை மிரட்டல் விடுத்துள்ளனர்.

தகாத வார்த்தைகளால் பேசித் தாக்கியவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும் தனது குழந்தையை மீட்டுத் தரவும் கோரி பாதிக்கப்பட்ட பெண் ஈரோடு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் புகார் அளித்தார்.

இச்சம்பவம் குறித்து அறிந்த விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் ஈரோடு கிழக்கு மாவட்ட செயலாளர் எஸ்.எம். சாதிக் மற்றும் பெருந்துறை சட்டமன்ற தொகுதி மாவட்ட செயலாளர் வி.விஜயபாலன் ஆகியோர் உடனடியாகக் களத்தில் இறங்கிப் பெண்ணிற்கு ஆதரவாக நின்றனர். விசிக நிர்வாகிகளின் முன்னிலையில்கொலைமிரட்டல்விடுத்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும் உயிருக்குப் பாதுகாப்பு வழங்கவும் கோரி புகார் மனு அளிக்கப்பட்டது. விசிக நிர்வாகிகளின் இந்தத் துரித நடவடிக்கை அப்பகுதியில் பெரும் நெகிழ்ச்சியையும் பரபரப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

# தென்னிந்திய சுற்றுலாப் பயணிகளின் மாறிவரும் பயண பழக்கங்களின் ஆய்வு முடிவுகள் ஸ்கூட் நிறுவனம் வெளியீடு!

கோவை, பிப்.1



இந்தியா சிங்கப்பூர் ஏர்லைன்ஸின் குறைந்த கட்டண துணை நிறுவனமான ஸ்கூட், தனது சமீபத்திய பயணப் போக்கு ஆய்வறிக்கையான "தென்னிந்திய பயண நுண்ணறிவு 2025"ன் முக்கிய முடிவுகளை அறிவித்தது. இந்த ஆய்வின் மூலம், தென்னிந்தியாவைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகள் தங்களது பயணத் திட்டமிடல் மற்றும் அனுபவங்களில் ஒரு புதிய மாற்றத்தைக் கொண்டு வருவது தெரியவந்துள்ளது. ஸ்கூட் நிறுவனத்திற்காக யூகோவ் நடத்திய இந்த ஆய்வில் சென்னை, பெங்களூரு, ஐதராபாத், திருவனந்தபுரம் மற்றும் விசாகப்பட்டினம் ஆகிய ஐந்து முக்கிய நகரங்களைச் சேர்ந்த சுமார் 1,600 பேர் பங்கேற்றனர். தென்னிந்தியப் பயணிகள் தனித்துவமான மற்றும் தங்களுக்குப் பிடித்தமான பயண அனுபவங்களை அதிகளவில் விரும்புவதாக ஸ்கூட் நிறுவனத்தின் ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன. இந்த ஆய்வின்படி, பாதிக்கும் மேற்பட்ட பயணிகள் (56%) தற்போது அதிகம் அறியப்படாத இடங்களுக்குச் செல்ல ஆர்வம் காட்டுகின்றனர். இந்த விருப்பங்களுக்கான காரணங்கள் குறித்துக் கேட்கப்பட்டபோது, சிக்கனமான செலவு (46%), கூட்ட நெரிசல் இல்லாத இடங்கள் (43%), எளிதான விசா நடைமுறைகள் (38%), மலிவான விமானக் கட்டணங்கள் (38%) மற்றும் விமானங்களின் இருப்பு (37%) ஆகியவற்றை முக்கியக் காரணிகளாகப் பதிலளித்தவர்கள் குறிப்பிட்டுள்ளனர். தென்னிந்தியப் பயணிகளிடையே கிராபி (தாய்லாந்து), டார்வின் (ஆஸ்திரேலியா) மற்றும் சியாங் ராய் (தாய்லாந்து) போன்ற இடங்கள் வழக்கத்திற்கு மாறான புதிய விருப்பமான இடங்களாக உருவெடுத்து வருகின்றன.

# அருந்ததியர் காலனியில் சாதி வெறி கும்பலின் இரவு தாக்குதல்:

## வீட்டை நொறுக்கி, குடும்பத்தை பூட்டி தப்பிய கும்பல் 5 பேர் கைது!

தர்மபுரி,பிப்.1

தர்மபுரி மாவட்டம், கடத்தூர் ஒன்றியம், தாளநத்தம் ஊராட்சிக்குட்பட்ட நடூர் கிராமத்தில் அருந்ததியர் சமூகத்தினர் 50க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றன. நேற்று முன்தினம் இரவு, அருந்ததியர் இளைஞர்கள் ஜெய்சிம்மன் (25) மற்றும் சந்தோஷ் (23) தங்கள் இரு சக்கர வாகனத்தில் அருகிலுள்ள குருபரஅள்ளி கிராமத்திற்கு உணவுக்கு சென்றனர்.

வன்னியர் சமூகத்தினர் அதிகம் வசிக்கும் அய்யம்பட்டி பகுதியில் அவர்களது வாகனம் பழுதடைந்துள்ளது.

அப்போது அங்கு வந்த வன்னியர் இளைஞர் "இங்கே யாரும் இருக்கக் கூடாது" எனக் கட்டளையிட்டார்.

இதில் வாக்குவாதம் முற்ற, ஐந்து வன்னியர் இளைஞர்கள் கூடி அருந்ததியர் இளைஞர்களை சாதிப் பெயர்களால் இழிவுபடுத்தி, கொலைவெறி தாக்குதல் நடத்தினர். தங்கள் வாகனத்தை மீட்டு இரவு 10 மணிக்கு நடூர் கிராமத்திற்கு திரும்பிய ஜெய்சிம்மனும் சந்தோஷும், சண்டையைப் பெற்றோருக்கு தெரிவிக்காமல் தூங்கச் சென்றனர்.

இதை அறிந்த சாதி வெறி கும்பல் – 10க்கும் மேற்பட்டோர் – ஜெய்சிம்மன் வீட்டிற்கு வந்து "வெளியே வா சக்கிலி நாயே" என ஆபாச வார்த்தைகளால் திட்டி, கட்டை, கம்பு, இரும்பு கம்பியால் வீட்டை உடைத்தனர். ஜன்னல்களையும் கதவுகளையும்அடித்து நொறுக்கி, அருகில் இருந்த இரு சக்க "யாரும் வெளியே வரக்கூடாது" என கொலை மிரட்டல் விடுத்து, கதவைப் பூட்டிவிட்டு தப்பினர். அக்கம்பக்கத்தினர் வருவதற்கு முன்பே கும்பல் தப்பித்தது. உடனடியாககடத்தூர்காவல்நிலையத்துக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. போலீசார் விரைந்து வந்து கதவை உடைத்து, பூட்டப்பட்ட வீட்டில் அச்சத்துடன் தவித்த அப்பாவி அருந்ததியர் குடும்பத்தினரை மீட்டனர். இதற்குப் பின் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் பாப்பிரெட்டிப்பட்டி தொகுதி மாவட்ட செயலாளர் சென்னகிருஷ்ணன் தலைமையில் 50க்கும் மேற்பட்டோர் நடூர் கிராமத்திற்கு சென்று, பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவு தெரிவித்து, கும்பலை கைது செய்ய கோரினர்.

பாதிக்கப்பட்ட இளைஞர்களிடம் பெறப்பட்ட புகாரின் அடிப்படையில், அய்யம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த வன்னியர் இளைஞர்கள் சந்தோஷ், சக்தி, சந்தரு, திலீபன், சூர்யா ஆகிய ஐந்துபேர் கைது செய்யப்பட்டனர்.







அவர்கள் மீது வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

சாதி வெறியர்கள் தங்கள் தங்கையை கேலி செய்ததாகக் கூறி, ஜெய்சிம்மன் சந்தோஷ் மீது பொய்ப் புகார் கொடுத்து வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

சாதி வெறியின் இத்தகைய கொடுமைகளுக்கு எதிராக உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என அருந்ததியர் சமூகம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## காரைக்குடி அரசு விழாவில்

# ரூ.2,872 கோடியில் நலத்திட்ட உதவிகள்!

### ★ முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்;
### ★ வேளாண் கல்லூரி, சட்டக்கல்லூரி, டைடல் பூங்காவையும் திறந்து வைத்தார்!!



காரைக்குடி, பிப்.1–

காரைக்குடியில் இன்று நடைபெற்ற பிரமாண்ட விழாவில் ரூ.2,872கோடியில் நலத்திட்ட உதவிகளை முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் வழங்கினார். சட்டம், வேளாண் ,கல்லூரிகளையும் திறந்து வைத்தார்.

முதல் அமைச்சர் மு.க.ஸ்டா லின் 2 நாட்கள் சுற்றுப்பயணமாக நேற்று சிவகங்கை மாவட்டம் காரைக்குடிக்கு வந்தார். முதல்அமைச்சருக்கு தி.மு.க. மாவட்ட செயலாளரும், கூட்டுறவுத்துறை அமைச்சருமான கே. ஆர்.பெரிய கருப்பன் தலைமையில் தி.மு.க.வினர், பொதுமக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

திருப்பத்தூர் அருகே சிராவயல்புதூரில் மகாத்மா காந்தி, கம்யூனிஸ்டு இயக்க தலைவர் ஜீவா னந்தம் சந்தித்த இடத்தில் ரூ.3 கோடியில் கட்டப்பட்ட நினைவு அரங்கம் திறந்து வைத்தார். குன் றக்குடியில் அடிகளார் நூற் றாண்டு விழாவில் பங்கேற்று குன்றக்குடி அடிகளார் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தார். பின்னர், காரைக்குடியில், திருச்சி பைபாஸ் சாலையில் உள்ள பத்திரப் பதிவுஅலுவலகம்அருகே ரூ. 50 லட்சம் மதிப்பீட்டில் நிறுவப்பட்ட வீறுகவியரசர் முடியரசனார்சிலையை திறந்துவைத்தார். அதன்பிறகு அவர் நேற்று இரவு காரைக்குடி அழகப்பா அரசினர் விருந்தினர் மாளிகை யில் தங்கினார். இன்று காலை 9 மணிக்கு காரைக்குடி அருகே உள்ள செட்டிநாடு பகுதியில் ரூ. 61 கோடியே 78லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட வேளாண் கல்லூரி கட்டிடத்தை முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்து பார்வையிட்டார்.

தொடர்ந்து காரைக்குடியில், திருச்சி பைபாஸ் சாலையில் ரூ.100 கோடியே 45 லட்சம் மதிப் பீட்டில் கட்டப்பட்ட சட்டக் கல் லூரி கட்டிடத்தையும் திறந்து வைத்தார். தொடர்ந்துஅங்குஅமைக்கப்பட்ட பிரமாண்ட பந்தலில் ரூ. 13கோடியே 36 லட்சம் மதிப்பீட்டில் நடைபெற உள்ள 28திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

தொடர்ந்து ரூ.2 ஆயிரத்து 559 கோடியே 50 லட்சம் மதிப்பீட்டில் திறைவு பெற்ற 49 திட்டப் பணிகளைதிறந்துவைத்து சிறப்புரை யாற்றினார். பின்னர் 15 ஆயி ஏத்து 453 பயனாளிகளுக்கு ரூ.205 கோடியே 6 லட்சம் மதிப் பீட்டில் தமிழக அரசின் நலத்திட்ட உதவி களை வழங்கினார். இந்த விழா ரூ.2,872 கோடிக்கான நலத்திட் டங்களை வழங் கும் வகையில் நடைபெற் றது. அதனைதொடர்ந்து காலை 11 மணிக்கு சட்டக் கல் லூரி அருகே புதிதாக ரூ.32கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட மினி டைடல் பார்க் கட்டிடத்தை திறந்து வைத்து பார்வையிட்டார்.

அதன் பின்னர் பகல் 11.30 மணிக்கு காரைக்குடியில் இருந்து திருப்பத்தூர் வழியாக மதுரை வந்து, விமானத்தில் சென்னை திரும்பினார். முதல்அமைச்சர் வருகையையொட்டி சிவகங்கை மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு சிவபிரசாத் தலைமையில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப் பட்டிருந்தன.



கோடம்பாக்கம் மண்டலம், வார்டு135, அசோக் நகர் 9ஆவது அவென்யூவில் உள்ள அரசினர் மகளிர் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற "உலகம் உங்கள் கையில்" எனும் மாபெரும் திட்டத்தின்கீழ், 1,619 கல்லூரி மாணவர்களுக்கு மடிக்கணினிகளை மருத்துவம் மற்றும்மக்கள்நல்வாழ்வுத்துறைஅமைச்சர்மா.சுப்பிரமணியன்,வழங்கினார்.இந்நிகழ்வில் சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.ஜெ.கருணாநிதி (தியாகராயநகர்), ஏ.எம்.வி.பிரபாகர் ராஜா (விருகம்பாக்கம்), மண்டலக்குழுத் தலைவர் திரு.எம்.கிருஷ்ணமூர்த்தி, மாமன்ற உறுப்பினர்கள், கல்லூரி பேராசிரியர்கள், மாணவ, மாணவிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



## வாணியம்பாடி அருகே கிரிசமுத்திரம் அரசு மேல்நிலைப் பள்ளியில் இலவச மிதிவண்டி வழங்கும் விழா!

வாணியம்பாடி,பிப்.1

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி அடுத்த கிரிசமுத்திரம் அரசு மேல்நிலைப் பள்ளியில் இலவச மிதிவண்டி வழங்கும் விழா பள்ளி வளாகத்தில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு பள்ளி தலைமை ஆசிரியர் ராணிதலைமை வகித்தார். ஊராட்சி மன்ற தலைவர் கண்ணன், துணைத்தலைவர் வெங்கடேசன், கல்வி மேலாண்மை குழு தலைவர் ஜோதி ஆகியோர் முன்னிலை வகித்தனர். உதவி தலைமை ஆசிரியர் சரவணன் அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளர்களாக ஆம்பூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.சி. வில்வநாதன், ஆலங்காயம் மேற்கு ஒன்றிய திமுக செயலாளர் வி. எஸ்.ஞானவேலன் ஆகியோர் கலந்து கொண்டு +1 மாணவர்கள் 92 பேருக்கு அரசின் இலவச மிதி வண்டிகளை வழங்கி வாழ்த்தி பேசினர். தொடர்ந்து பள்ளி வளாகத்தில் புதிய கூடுதல் வகுப்பறைகள் கட்டிட பணிகளை பார்வையிட்டு விரைந்து முடிக்க கேட்டுக்கொண்டனர்.

நிகழ்ச்சியில் தலைமை செயற்குழு உறுப்பினர் மு.அசோகன்,பொதுக்குழு உறுப்பினர் வி.எம்.கோவிந்தம்மாள் பெருமாள், மாவட்ட பிரதிநிதி சிவகுமார், ஒன்றிய பொருளாளர் எம்.சி.தசரதன், ஒன்றிய துணைச் செயலாளர் குமார், அவைத்தலைவர் எம்.சி.ராமநாதன், மாவட்ட பிரதிநிதி சிவகுமார், ஒன்றிய குழு உறுப்பினர் லக்ஷ்மி பொன்னம்பலம், மேற்கு ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் ஞானசேகரன், செல்வம், பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள், ஊர் பொதுமக்கள் கலந்து கொண்டனர். முடிவில் உடற்கல்வி ஆசிரியர் சுரேஷ் பாபு நன்றி கூறினார்.

## சமயபுரம் கோவிலுக்கு

# பாதயாத்திரை சென்ற 4 பெண்கள் சாவு!

### ★ அதிவேகமாக வந்த கார் மோதியது;
### ★ பெரம்பலூர் அருகே அதிகாலை விபத்து!!

பெரம்பலூர், பிப்.1–

கடலூர் மாவட்டம், திட்டக்குடி அருகேயுள்ள தொளார்க்குடிகாடு கிராமத்தை சேர்ந்த பக்தர்கள் 65 பேர் மாலை அணிந்து சமயபுரம் கோவிலுக்கு பாதயாத்திரையாக சென்றனர். இதேபோல, சேலம் மாவட்டம் கெங்கவல்லியை சேர்ந்த பக்தர்களும் பாதயாத்திரையாக நடந்து சென்றனர். இவர்கள் இன்று காலை 5 மணி அளவில் சென்னை திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் பெரம்பலூர் மாவட்டம் சிறுவாச்சூரைகடந்துசமயபுரம் நோக்கி சென்று கொண்டிருந்தனர்.

அப்போது, சென்னையில் இருந்து திருச்சி நோக்கி சென்ற கார் ஒன்று பாதையை யாத்திரை சென்ற பக்தர்கள் கூட்டத்தில் புகுந்து விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில், கடலூர் மாவட்டம் பெண்ணாடம் அருகே உள்ள தொளார்க்குடிகாடு கிராமத்தைச் சேர்ந்த சுப்பிரமணியன் மனைவி மலர்க்கொடி (35), சுப்பிரமணி மனைவி விஜய லட்சுமி (40) சசிகலா(47) மற்றும் சேலம் மாவட்டம் கெங்கவல்லியைச் சேர்ந்த மருதமுத்து மனைவி சித்ரா (40) திருநாவுக்கரசு மனைவி சசிகலா (47) ஆகிய 4 பக்தர்களும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். தொளார்குடிக்காடு கிராமத்தைச் சேர்ந்தபரமசிவம்மனைவி ஜோதிலட்சுமி (57) என்பவர் காய ங்களுடன் பெரம்பலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். இந்த விபத்து குறித்துபெரம்பலூர்டவுன் போலீசார் வழக்கு பதிந்து கார் ஓட்டுநர் சென்னை, திரிசூலம், ஈஸ்வரன் கோவில் தெருவை சேர்ந்த கௌ தம்(24) என்பவரை கைது செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். விபத்தில் சிக்கி உயிரிழந்த நான்கு பேரின் உடல்களும் பெரம்பலூர் அரசு மருத்துவமனையில் உடற்கூறு ஆய்வுக்காக போலீசார் அனுப்பி வைத்துள்ளனர்.

## ஜெகதேவி மின்வாரிய அலுவலகத்தில் ரூ.1.70 கோடி கையாடல்: இருவர் கைது!



கிருஷ்ணகிரி,பிப்.1

கிருஷ்ணகிரி மாவட்டம், ஜெகதேவி மின்வாரிய அலுவலகத்தில் ரூ. 1.70 கோடி கையாடல் செய்த வழக்கில், அலுவலர்கள் இருவரை போலீசார் கைது செய்தனர்.

கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூரை அடுத்த ஜெகதேவியில் உள்ள மின்வாரிய அலுவலகத்தில் போச்சம்பள்ளி வட்டம், திப்பம்பட்டியைச் சேர்ந்த கணேசன் (53) கணக்கியல் ஆய்வாளராகவும், பழைய போச்சம்பள்ளியைச் சேர்ந்த செல்வம் (57) கணக்கு மேற்பாற்வையாளராகவும் 12.04.2013 முதல் 19.06.2017 வரையிலான காலத்தில் பணியாற்றினர். அப்போது, இவர்கள் நுகர்வோரிடமிருந்து மின்கட்டணமாக ரூ.2.99 கோடி வசூலித்து, தமிழ்நாடு மின்வாரியத்துக்கு ரூ.1.29 கோடி மட்டுமே செலுத்தி,மீதப்பணத்தை கையாடல் செய்துள்ளனர். இதுகுறித்து ஜெகதேவி மின்வாரிய அலுவலக இளநிலை பொறியாளர் சரவணன், கிருஷ்ணகிரி மாவட்ட குற்றப்பிரிவில் புதன்கிழமை புகார் அளித்தார். அதன்பே ரில், போலீசார் வழக்குப் பதிந்து தற்போது திருப்பத்தூர் மாவட்டம், சுந்தரம்பள்ளி மின்வாரிய அலுவலகத்தில் வருவாய் மேற்பார்வை வையாளராக பணியாற்றும் கணேசன், திருவண்ணாமலை மாவட்டம், செஞ்சி கோட்டம் மின்வாரிய அலுவலகத்தில் கணக்கு மேற்பாற்வையாளராக பணியாற்றும் செல்வம் ஆகிய இருவரையும் கைது செய்தனர்.




### 2–வது நாளாக சரிவு:

## தங்கம் விலை பவுனுக்கு ரூ.15,200 குறைந்தது!

### வெள்ளி விலை கிராமுக்கு 55 இறங்கியது!!

சென்னை,பிப்.1–

நேற்று முன்தினம் அதிரடியாக ஏற்றம் கண்ட தங்கம், வெள்ளி விலை, எந்த வேகத்தில் ஏறியதோ, நேற்று அதே வேகத்தில் இறக்கம் கண்டு இருந்ததை பார்க்க முடிந்தது. அதன்படி, தங்கம் விலை நேற்று முன்தினத்தை விட நேற்று காலையில் கிராமுக்கு ரூ.600ம், சவரனுக்கு ரூ.4,800ம் குறைந்திருந்தது. பிற்பகலில் மேலும் கூடுதலாக கிராமுக்கு ரூ.350ம், சவரனுக்கு ரூ.2,800ம் சரிந்திருந்தது. ஆக நேற்று ஒரே நாளில் மட்டும் கிராமுக்கு ரூ.950ம், சவரனுக்கு ரூ.7,600ம் சரிந்து, ஒரு கிராம் ரூ.15 ஆயிரத்து 850க்கும், ஒரு சவரன் ரூ.1 லட்சத்து 26 ஆயிரத்து 800க்கும் விற்பனை ஆனது.

இந்நிலையில் தங்கம் விலை இன்று அதிரடியாக குறைந்துள்ளது. சென்னையில் இன்று 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.7,600 குறைந்து ரூ.1,19,200க்குவிற்பனை செய்யப்படுகிறது. தங்கம் விலை கிராமுக்கு ரூ.950 குறைந்து ரூ.14,900க்கு விற்பனை செய்யப்படுகிறது.

தங்கத்தை தொடர்ந்து வெள்ளி விலையும் இன்று குறைந்துள்ளது. வெள்ளி கிராமுக்கு ரூ.55 குறைந்து ஒரு கிராம் வெள்ளி ரூ.350க்கும் பார் வெள்ளி 3 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

தங்கம் விலை நேற்றும் இன்றும் சவரனுக்கு ரூ.15,200 குறைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## மாணவியிடம் அத்துமீறிய மாணவர் மீது 'போக்சோ' வழக்கு!

கோபி, ஜன. 31.

திருப்பூர்மாவட்டம்,பொம்மநாயக்கன்பாளையத்தை சேர்ந்தவர் நித்தீஷ் ஆனந்த், (19); ஈரோட்டில் ஒரு கல்லூரியில் படித்து வருகிறார். தன்னுடன் கல்லூரியில் பயின்ற கோபியை சேர்ந்த, 18 வயது மாணவியை காதலித்து வந்தார். திருமணம் செய்து கொள்வதாக ஆசை வார்த்தை கூறி, அவரது பெற்றோர் இல்லாத சம யத்தில் கோபியில் வீட்டுக்கே சென்று . தவறாக நடந்துள்ளார். சிறுமியின் தாய் கோபி அனைத்து மகளிர் போலீசார், நித்தீஷ் ஆனந்த் மீது போக்சோ பிரிவில் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.



## வாணியம்பாடி கன்கார்டியா மேல்நிலைப் பள்ளியில் இலவச மிதிவண்டி வழங்கும் விழா!

வாணியம்பாடி, பிப்.1

திருப்பத்தூர்மாவட்டம்வாணியம்பாடி கன்கார்டியா மேல்நிலைப் பள்ளியில் இலவச மிதிவண்டி வழங்கும் விழா பள்ளி வளாகத்தில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு பள்ளி தலைமை ஆசிரியர் ஏ.கோபி தலைமை வகித்து அனைவரையும் வரவேற்றார். ஆம்பூர் சபை சங்கம் தலைவர் ரெவெரென்ட் எல். எஸ்.டி கிளாட்சன் பிரேம் குமார், வாணியம்பாடி பைபாஸ் குட் ஷெப்பர்ட் சர்ச் ரெவெரென்ட் எம்.சாலமோன் சித்தார்தன், நகர மன்ற துணைத் தலைவர் கே.கயாஸ் அஹமத் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளர்களாக நகர மன்ற தலைவர் உமா சிவாஜி கணேசன், திமுக நகர செயலாளர் வி.எஸ்.சாரதி குமார் ஆகியோர் கலந்து கொண்டு +1 மாணவர்கள் 52 பேருக்கு அரசின் இலவச மிதி வண்டிகளை வழங்கி வாழ்த்தி பேசினர்.

நிகழ்ச்சியில் திமுக நகர துணை செயலாளர் கே.தென்னரசு, மாவட்ட பிரதிநிதி ஜெ.ரவி, நகர மன்ற உறுப்பினர்கள் டி.சித்ரா தென்னரசு, எஸ். கனகவள்ளி ஸ்டாலின், ஆர். சுபாஷிணி செல்வம், ஷாஹுன் பேகம் சலீம், எஸ். ராஜலக்ஷ்மி ஜெயகாந்தன், வார்டு செயலாளர்கள், பள்ளி ஆசிரியர்கள், பெற்றோர்கள் மாணவர்கள் என பலர் கலந்து கொண்டனர். முடிவில் உதவி தலைமை ஆசிரியர் ஏ.ஆடலின் பிரமிளா குமாரி நன்றி கூறினார்.